1968 பிப்ரவரி 13]

திரு. வி. கே. கோதண்டராமன் : இத்தனை தீர்வைகளைக் கொடுத்தும் அதற்குமேல் மின்சாரக் கட்டணம் என்கிற பேரிலே தனியாக ஒரு வரியை மாதாமாதம் கட்டுகிருர்களே . அது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா ? உணவு உற்பத்திக்கு உற்சாகம் ஊட்டக்கூடிய தன்மையில் அந்த வரியிலிருந்து விலக்களிக்க அல்லது ரிபேட் கொடுக்க உத்தேசம் உண்டா ?

(விடை இல்லை)

திரு. சி. வீரமணி : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, மேட்டூர் அணை சேலம் மாவட்டத்திலே கட்டப்பட்டிருந்தாலும் கூட அந்த மேட்டூர் அணையினுல் சேலம் மாவட்டத்திற்கு எந்த வித உபயோகமும் இல்லாமல் இருக்கிறது. இதனுல் அந்த சேலம் மாவட்டம் முழுவதும் உள்ள புஞ்சை நிலங்களை நஞ்சை நிலங்களாக மாற்ற மேட்டூர் அணையிலுள்ள தண்ணீரைப் பயன்படுத்தத் திட்டம் இருக்கிறதா ? திருமணிமுத்தாறு திட்டம் என்ற திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தை அமல் நடத்த அரசாங்கம் உத்தேசிக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : அதற்குத் தஞ்சை மாவட்டத்தில் புதிதாக ஒரு அணையைக்கட்டி சேலத்தைப்போல் தஞ்சை மாவட்டத்தைப் புஞ்சையாக ஆக்கிவிடலாம். (சிரிப்பு)

திரு. க. கோமதிசங்கர திட்சிதர் : சபாநாயகரவர்களே, அம்பாசமுத்திரம் தொகுதியில் விவசாயிகள் உணவு உற்பத்தியில் அதிகமாக ஈடுபட்டு உணவு உற்பத்தியைப் பெருக்குகிற நிலையில் தண்ட தீர்வையை 15 மடங்கு, 20 மடங்கு போட்டால் அவர்கள் ஊக்கம் குறைந்துவிடலாம். அதனுல் தண்டத் தீர்வையைக் குறைந்த அளவில் போட அரசாங்கம் முன்வருமா ? மு. ப. 10-00

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தண்டத் தீர்வை என்பது தவறு செய்யப்பட்ட நேரத்தில் வசூலிக்கிற தண்டனைப் பணம். அந்த 15 மடங்கு என்பது எந்த அளவுக்குக் குறைக்க முடியுமோ அந்த அளவுக்குக் குறைக்கப்பட்ட பின் இருக்கிற தீர்வை. ஆனுல் இதுவும் குறைக்கப்பட வேண்டுமென்று சொல்வது தவறு செய்பவர்களுக்கு மேலும் வாய்ப்பு அளிப்பதாக ஆகிவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினு எண்கள் 20, 21 ஒத்தி வைக்கப்படுகின்றன. அடுத்து, வினு எண் 22.

பஞ்சாயத்து யூனியன் கடைநிலை ஊழியர்கள்

*22 **கேள்வி.—திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பல்வேறு இலாக்காக்களிலிருந்து வந்து, பஞ்சாயத்து யூனியன்களில் வேலை பார்க்கும் கடைநிலை ஊழியர்களுள், தகுதிக்கான பருவம், காலம் முடிந்தவர்கள் நிரந்திரம் செய்யப்பட்டவர்கள், இவர்களுடைய பென்ஷன், இன்கிரிமென்ட் முதலானவைகள் பாதிக்கப்படுவதை அரசாங்கம் அறியுமா ?

[1968 பிப்ரவரி 13

(இ) ஆம் எனில், அப்படி பாதிக்கப்பட்டவர்களை மறுபடியும் பழைய இலாகாவிற்கே மாற்ற உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) & (இ) ஒரு பணியாளரைத் தவிர வேறு கடைநிலைப்பணியாளர் எவரும் சம்பளத்திலும் ஓய்வு ஊதியத்திலும் பாதிக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட பணியாளரும் சொந்த துறைக்குத் திருப்பியனுப்பப்பட ஆவன செய்யப்படுகிறது. இதனால் பணியாளரின் சம்பளம், ஓய்வு ஊதியம் பாதிக்கப்படமாட்டாது. மேலும், சொந்த துறைக்குத் திரும்பிச் செல்ல விழையும் பணியாளரையும் திருப்பியனுப்ப ஆவன செய்யப்படுகிறது.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, ஒரே ஒரு கடைநிலை ஊழியர் தான் பாதிக்கப்பட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது யார் என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதைப் பற்றிய விவரம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அவையுரிமைக் கேள்விகள் திரு. இளம்வழுதி அவர்களுடைய அவையுரிமைக் கேள்வியை இன்றைக்கு எடுத்துக் கொள்வதாக இருந்தது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மாண்புமிகு பேரவை முன்னவர்—லீடர் ஆஃப் தி ஹவுஸ்— அவர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்க நாளை வரை அது தள்ளி வைக்கப்படுகிறது.

3. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

(i) கோவையில் நடந்த சம்பவங்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய ஒற்றிவைப்புத் தீர்மானம். அந்தத் தீர்மானத்தை இன்றைக்குப் படித்துவிட்டு, அந்த தீர்மானம் எப்படி விதி 50 (viii)-க்குள் வருகிறது, அதாவது சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியமாக இல்லை என்பதைப் பற்றி நாளைக்கு விளக்கிப் பேசுவார்கள். இன்றைக்கு தீர்மானத்தை அவைமுன் வைப்பார்கள்.

THIRU P. G. KARUTHIRUMAN : Mr. Speaker, Sir.

I have given notice of the following adjournment motion :—

"That the business of the House do stand adjourned to discuss an urgent matter of public importance, viz.,

'The occurrence in Coimbatore on 8th February 1968 at the Congress Meeting held in the V.O.C. Park when indiscriminate throwing of stones and brickbats happened and Hon. Sri